செ.வெ.எண்: 224 நாள்: 04.04.2020

**வேளாண்மைத்துறை மூலம் காய்கறி தொகுப்பு பைகள், மற்றும் நடமாடும் காய்கறி விற்பனை மையம் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர், திரு.ம.கோவிந்தராவ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

தஞ்சாவூர் மாவட்டத்தில் கொராணா வைரஸ் தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது, இந்நிலையில் காய்கறிகளை ஒரு இடத்தில் விற்பனை செய்யும் போது, பொது மக்கள் அனைவரும் அவ்விடத்திற்கு வந்து பொருட்களை வாங்க வேண்டும் மேலும் சமூகவிலகலை பின்பற்றுவதில் உள்ள சிரமங்களை கருத்தில் கொண்டு, காய்கறிகளை நடமாடும் விற்பனை மையங்கள் மூலம் வேளாண்மைத்துறையில் செயல்பட்டு வரும் உழவர் உற்பத்தியாளர் குழுக்களை கொண்டு நுகர்வோர் வீடுகளுக்கே சென்று விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

பேராவூரணியில் உள்ள உழவர் உற்பத்தியாளர் நிறுவனம், நடமாடும் காய்கறி விற்பனை மையம் மூலம் வீடு வீடாக சென்று காய்கறிகள், மளிகை சாமான்கள் மற்றும் விவசாய இடுபொருட்கள் ஆகியற்றை பேராவூரணி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

. மேலும் தோட்டக்கலை துறை மூலமாகவும் தஞ்சாவூர் உழவர் சந்தையில் காய்கறி தொகுப்பு பைகள் ரூ.100/- மதிப்பில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேலும் ராஜராஜன் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் மூலம் காய்கறி தொகுப்பு பைகள் நாளை முதல் விநியோகம் செய்யப்பட உள்ளது. முன்னையம்பட்டியில் உள்ள உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் மூலம் காய்கறிகள் நடமாடும் வேனில் தஞ்சாவூரை சுற்றியுள்ள பகுதியில் விநியோகம் செய்யப்பட உள்ளது.

கூட்டுறவு துறை மூலம் தஞ்சாவூர் பகுதியில் 2 எண்கள் நடமாடும் காய்கறி விற்பனை மையமும், கும்பகோணம் மற்றும் சுற்று வட்டார பகுதியில் 5 எண்கள் நடமாடும் காய்கறி விற்பனை மையமும் இயங்கி வருகிறது.

மேலும் தோட்டக்லைத்துறை மூலம் தற்சமயம் அறுவடை செய்யப்பட்ட தர்பூசணி பழங்களை, விவசாயிகள் வயல்களில் இருந்து விற்பனை மையங்களுக்கு எடுத்து செல்வதற்கு உதவி செய்யப்பட்டு, 64 மெ.டன் தர்பூசணி பழங்கள் விற்பனை செய்யப்பட்டது..

இவ்வாறு செயல்படுவதன் மூலம் விவசாயிகளின் விளைபொருட்களுக்கு நல்ல விலையும், நுகர்வோருக்கும் நியாயமான விலையில் காய்கறிகள் கிடைக்கிறது. மேலும் கொராணா தடுப்பு நடவடிக்கைகும் இது பேருதவியாக உள்ளது, சமூக விலகலை கடைபிடித்திடவும் உதவுகிறது என தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர், திரு.ம.கோவிந்தராவ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.